NSW கல்வித் திணைக்களம்

# மாணவர்கள் NSWEduChat-ஐ அணுகுதல்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்

**NSWEduChat என்பது NSW கல்வித்திணைக்களத்தினால் (NSW Department of Education) சொந்தமாக வடிவமைக்கப்பட்ட ஒரு ஆக்கவியல் செயற்கை நுண்ணறிவு கருவியாகும். இது பாதுகாப்பானதும், கல்விசார்ந்ததும், நம்பகமானதும் மற்றும் தனிப்பட்டதாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.**

### மாணவர்கள் NSWEduChat-ஐ அணுகுதல்

5 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் 2025 ஆம் ஆண்டு 4 ஆம் தவணையில், NSWEduChat-ஐ அணுகலாம்.

### NSWEduChat-ஐ பயன்படுத்தும் மாணவர்களின் பாதுகாப்பு

NSWEduChat-இன் தரவுகள் பாதுகாப்பானவை. அனைத்து தரவுகளும் கல்வி திணைக்களத்துக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கும். இதன் பொருள், மாணவர்கள் தங்களது பாடப் பணிகள் மற்றும் தனிப்பட்ட அடையாளத் தகவல்களை NSWEduChat-இல் பாதுகாப்பாக உள்ளிடலாம்.

### NSWEduChat-இன் கல்விசார் வடிவமைப்பு

NSWEduChat கேள்விகளுக்கு முழுமையான பதில்களை மட்டுமே வழங்குவதில்லை. இது மாணவர்களிடம் திறந்த-நிலை (சுயவிடை) கேள்விகளை கேட்டு பதிலளிக்கிறது. இது மாணவர்கள் தங்களது கருத்துக்களையும் அவற்றிற்கான நியாயங்களையும் ஆராய்ந்து பகிரும் முனைப்பை வளர்க்க ஊக்குவிக்கிறது. NSWEduChat வெறும் உரை வடிவை மட்டுமே பயன்படுத்துகிறது. இதன் பொருள், படங்கள், வீடியோக்கள் அல்லது இசை போன்ற ஊடகங்களை அதனால் உருவாக்கமுடியாது.

### வீட்டுப்பாடம் மற்றும் மதிப்பீட்டுப் பணிகளுக்கு உதவி பெற NSWEduChat ஐப் பயன்படுத்துதல்

வீட்டுப்பாடம் அல்லது மதிப்பீட்டுப் பணிகளுக்கு NSWEduChat-ஐப் பயன்படுத்தலாம் என்று பள்ளிகள் அறிவித்திருந்து, மாணவர்கள் தங்கள் பணிகளை முடிப்பதில் NSWEduChat-ஐப் பயன்படுத்தியிருந்தால் தங்கள் ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இதில் படிப்புக் குறிப்புகளைச் சுருக்கமாகச் சொல்லுதல், முக்கிய சொற்களின் பொருள் விளக்கம் அல்லது உரையை கட்டமைத்தல் போன்ற பணிகளுக்கு NSWEduChat-ஐப் பயன்படுத்துதல் என்பனவும் (இவை மட்டுமல்ல) அடங்கும். மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு பொருத்தமான முறையில் தெரிவிக்கக்கூடிய வழிகளைப் பள்ளிகள் தெளிவாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

### வீட்டில் NSWEduChat-ஐ அணுகுதல்

மாணவர்கள் வீட்டில் NSWEduChat-ஐ பின்வரும்வழிகளில் அணுகலாம்:

- மாணவர்கள் மாணவர் இணையவழி நுழைவாயில் (Student portal) https://portal.education.nsw.gov.au/
- நேரடியாக: chat.education.nsw.gov.au வழியாக

மாணவர்கள் தங்கள் NSW Department of Education உள்நுழைவைப் பயன்படுத்தி உள்நுழைய வேண்டும். உள்நுழைந்த மாணவர் மட்டுமே NSWEduChat ஐப் பயன்படுத்த வேண்டும்.

இந்த சாதனத்தின் எந்தவொரு அம்சத்தைப் பற்றியும் கலந்துரையாட நீங்கள் விரும்பினால், தயவுசெய்து பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தகவல் மற்றும் NSWEduChat parental privacy notice (NSWEduChat பெற்றோர் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு அறிவிப்பு) அணுகலுக்கு, இங்கு செல்லவும்: NSWEduChat இன் மாணவர் பயன்பாடு (Student use of NSWEduChat)

### தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை (TIS): 131 450

உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவையானால் TIS-ஐ அழைத்து, உங்களுக்கு எந்த மொழி தேவையென்றும் மற்றும் நீங்கள் அழைக்க விரும்பும் எண்ணையும் தெரிவிக்கவும். தொலைபேசி இயக்குபவர் உரையாடலில் உதவ ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.